கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.24/2021** தேதி: **28.11.2025**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (முருகன், த/பெ.அருணகிரி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) வழக்கு தாக்கல் செய்துள்ள பன்னீர்செல்வத்தை எப்படி எனக்கு தெரியும் என்றால் அழகுநிலையம் வைத்துள்ளார் ஆகவே தெரியும். அவரை மட்டும் தெரியுமா அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் தெரியுமா என்றால் அனைவரையும் தெரியும். இந்த வழக்கிற்கு முன்பாக எத்தனை ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் 2017 ல் இருந்து தெரியும். வாதி பன்னீர்செல்வம் சுமார் 15 ஆண்டுகளாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு ஒரு கை மற்றும் ஒரு கால் செயலற்று இருக்கிறார் என்றால் சரியல்ல.

(2) வாதி பன்னீர் செல்வம் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் நான் என்ன என்ன வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிறைய வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். எல்லா வழக்கு எண்கள் எனக்கு தெரியாது. தெரிந்தது பின்வருமாறு அசல் வழக்கு எண் 55/2021 , 127/2021, 128/2021, 49/2021, 47/2021, 48/2021 ஆகியவை அவற்றுள் சில. என்ன பரிகாரம் இதில் கோரியுள்ளேன் என்றால் பதியப்பட்ட கிரைய ஒப்பந்தத்தின் படி கிரையம் எழுதிக்கொடுக்கு மாறு கோரியுள்ளேன்.

(3) எனக்கு எதிராக வாதிகள் என்ன என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அசல் வழக்கு எண் 22/2021, 24/2021 மற்றும் 47/2021 ஆகியவை

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.28 18:17:13 +0530

தாக்கல் செய்துள்ளனர். அதில் அனுபவபாத்தியம் நான் கேட்ககூடாது என்று தாக்கல் செய்துள்ளார்கள். எனது மணைவி உஷா இல்லத்தரசி என்றால் சரிதான். நானும் எனது மணைவியும் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி எனக்கு பொது விளம்பரம் கொடுத்தார் என்றால் சரிதான். அதற்கு நான் ஆட்சேபனை அளிக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.11.28 18:17:17 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***